தமிழ்ப் பல்கலைக்கழகச்

செய்திமலர்

திருவள்ளுவராண்டு 2035 சூன் 2004

மராத்திமொழி வல்லுநர் குழு பல்கலைக்கழகத்திற்கு வருகை

தஞ்சை மராத்தியர்களின் இலக்கியக் கலைப் பணி குறிப்பிடத்தக்கது ஆகும். 17, 18, 19 ஆகிய நூற்றாண்டுகளைச் சார்ந்த தமிழ், ஆங்கிலம், மராத்தி - மோடி ஆவணங்கள் சரசுவதி மகால் நூலகத்திலும், தமிழ்ப் பல்கலைக்கழக அரிய கையெழுத்துச்சுவடித் துறையிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் அக்கால அரசியல், சமூகம், பொருளாதாரம், கலைகள், பண்பாட்டு வரலாறு முதலானவை பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க ஆவணங்களை மகாராஷ்டிர மாநில அரசு நியமித்துள்ள இராஜ்ய மராத்தி விகாஸ் சன்ஸ்தா (Rajya Marathi Vikas Sanstha) விலிருந்து திருமதி வசுந்தரா பென்ட்சே நாயக் (Mrs. Vasundhara Pendse Naik) (இயக்குநர்), (துணை இயக்குநர்), முனைவர் சதானந்த் மோரே (Dr.Sadanand More) ஆகிய மூவரும், சரசுவதி மகால் நூலக மோடி வல்லுநர் முனைவர் இராசு. விவேகானந்த கோபால் ஆகியோரும் 16.6.2004 அன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு வருகைபுரிந்து பார்வையிட்டனர்.

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் இக் குழுவினருடன் திரு. இரா.ஜெயக்குமார் பதிவாளர் (பொறுப்பு), சுவடிப்புலத் தலைவரும் ஆட்சிக்குழு உறுப்பினருமான முனைவர் த.கோ.பரமசிவம், அரியகையெழுத்துச் சுவடித்துறைத்தலைவர் முதுமுனைவர் ம.சா.அறிவுடைநம்பி, தொழில்நுட்பாளர் முனைவர் சி.இலட்சுமணன் ஆகியோரும் கலந்து கொண்டனர். மராத்தி - மோடி ஆவணங்களை நுண்படமெடுத்தல், அட்டவணைப்படுத்துதல், பதிப்பித்து வெளியிடுதல் போன்றவற்றின் அடிப்படையில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

- முதுமுனைவர் **ம.சா. அறிவுடைநம்பி,**
அரியகையெழுத்துச்சுவடித்துறை

தாண்டிக்குடி அகழாய்வு



தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்களின் ஆணையின் பேரில் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறைத்தலைவர் முனைவர் கா. ராஜன் தலைமையில் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டம் தாண்டிக்குடி என்ற ஊரில் மே 2004இல் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. மத்திய தொல்லியல் ஆய்வுத்துறை இவ்வகழாய்விற்கு நல்கை வழங்கி ஊக்குவித்துள்ளது. தமிழரின் தொன்மைப் பண்பாட்டினை வெளிக்கொணரவும் மாணவர்களுக்குத் தொல்லியல் அகழாய்வு நெறிமுறைகளில் பயிற்சி அளிக்கவும் இவ்வகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பிடத்தக்க தொல்லியல் எச்சங்களைக் கொண்டுள்ள தாண்டிக்குடி திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், வத்தலக்குண்டிலிருந்து வடகிழக்காக 47 கி.மீ. தொலைவில் கீழ்ப் பழநி மலையில் அமைந்துள்ளது. அவ்வூர் மருத நதியின் இடது கரையில் கடல் மட்டத்திலிருந்து 4400 அடி உயரத்தில் அமைந்துள்ளது. தாண்டிக்குடி சிறப்பான மண்வளம், நீர்வளம் மற்றும் சுற்றுப்புறச் சூழலைக் கொண்டிருக்கிறது. இதனால் இங்குப் பெருங்கற்படைக் காலம் தொட்டே மக்கள் வாழ்ந்ததற்கான தொல்லியல் எச்சங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இப்பகுதியானது சங்க காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர்களான தோன்றிக்கோன் மற்றும் கோடைப்பொருநன் ஆகியோருடன் தொடர்புபடுத்தப்படுகிறது. சங்கப் புலவர் அய்யூர் முடவனார் தோன்றிப் பகுதியில் ஆட்சிபுரிந்த குறுநில மன்னரைப்பற்றிப் புறநானூற்றுப் பாடலில் (399) குறிப்பிடுகின்றார். இப்புலவர் குறிப்பிடும் பகுதியானது தான்றிக்குடியாக இருக்கலாம் என அடையாளப்படுத்தப்படுகிறது. பெருந்தலைச் சாத்தனார் என்ற மற்றொரு சங்கப் புலவர் கோடைப்பொருநன் என்ற குறுநில மன்னன் வேள்வி செய்ததாகக் குறிப்பிடுகின்றார். இதில் கோடை என்பது தற்போதுள்ள கொடைக்கானல் பகுதியாக அடையாளப்படுத்தப்படுகிறது. தாண்டிக்குடி மற்றும் கொடைக்கானல் ஆகிய இவ்விருபகுதிகளும் அடுக்கம், செண்பகனூர், மச்சூர், பெருமாள்மலை, பண்ணைக்காடு, மூலையூர், கதவுமலை, மணலூர், கானல்காடு, கொடலங்காடு, பேத்துபாறை, பாச்சலூர், ஆடலூர், பூலத்தூர், வெள்ளகவி மற்றும் பெரும்பள்ளம் போன்ற அதிக எண்ணிக்கையிலான தொல்லியல் இருப்பிடங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட இடங்கள் அனைத்தும் கீழ்ப் பழநி மலையில் அமைந்துள்ளன. இதனால் சங்ககாலத்தில் கீழ்ப் பழநி மலைப்பகுதிகள் மிக முக்கியப் பங்காற்றியுள்ளமைதெளிவாகத் தெரியவருகிறது. கி.மு. 5ஆம் நூற்றாண்டு முதற்கொண்டே இப்பகுதிகளில் பண்பாட்டுப் பரவல் நிகழ்ந்துள்ளதை இங்குக் கிடைக்கும் தொல்லியல் எச்சங்கள் தெளிவுறுத்துகின்றன.

1928ல் மதுரை மாவட்ட ஆட்சியராக இருந்த ஆங்லெட் (Anglade) தாண்டிக்குடிப் பகுதியில் இருக்கும் சில சிதைவுற்ற கல்திட்டைகள் (Dolmens) இருந்ததை ஆவணப்படுத்தியுள்ளார். இது தவிர இப்பகுதியில் எவ்விதத் தொல்லியல் ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. அண்மையில் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொல்லியல்துறையின் ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவி செல்வி மோ. சரண்யா மேற்கொண்ட தொல்லியல் களப்பணி மூலம் இப்பகுதியின் தொல்லியல் முக்கியத்துவம் வெளிக்கொணரப்பட்டது. அவர் தந்த தொல்லியல் தரவுகளின் அடிப்படையில் முனைவர் கா. ராஜன் அவர்கள் ஏப்ரல் 2003ஆம் ஆண்டு இப்பகுதியில் கள ஆய்வை மேற்கொண்டார். இவ்வாய்வின் மூலம் கீழ்ப் பழநி மலைப்பகுதியில் பத்திற்கும் மேற்பட்ட தொல்லியல்சார் அமைவிடங்களை வெளிப்படுத்தினார். அவற்றுள் தாண்டிக்குடி முக்கிய ஊர் என்பதை அங்குக் காணும் தொல்லியல் எச்சங்கள் மூலம் புலப்படுத்தினார். தாண்டிக்குடியில் பாண்டிய மன்னரான குலசேகர பாண்டியனது 12ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டது (கி.பி.1280). இதில் இவ்வூர் தான்றிக்குடி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. "தான்றி" என்பது ஒரு மரவகையின் பெயர். இது இன்றும் இப்பகுதியில் அதிக அளவில் காணப்படுகின்றது. இதன் தாவரவியல் பெயர் டெர்மினலியா பெல்லரிக்கா (Termenalia bellerica) என்பதாகும். "குடி" என்பது இனம்சார்ந்த குடியிருப்பைக் குறிக்கும். எனவே தாண்டிக்குடி என்பது "தான்றிக்குடி" யிலிருந்து மருவிய சொல்லாகும். இக்கல்வெட்டு மணலூருக்கும் தாண்டிக்குடிக்கும் இடையே நிலவிய முன்பகையைத் தீர்த்து இவ்விரு ஊரார்களும் தங்களிடையே ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தைப் பற்றிக் கூறுகிறது. இப்பகுதியில் தொடர்ந்து 2500 ஆண்டுகளுக்கும் மேலாகப் பண்பாட்டுப் பரவல் நிகழ்ந்துள்ளமைக்கு இங்குக் காணப்படும் தொல்லியல் எச்சங்கள் சான்று பகர்கின்றன. இதற்கு இப்பகுதியின் சுற்றுப்புறச்சூழலே காரணமாகும். சமவெளிகளைச் சுற்றிலும் இயற்கையான மலைகள், வற்றாத நீர்ஊற்றுகள், வளமையான மண் அமைந்துள்ளன. எனவே இப்பகுதியில் ஆதிகாலம் தொட்டே மக்கள் வாழ்ந்துள்ளனர். அப்பகுதியில் நிலவிய சீதோஷ்ணநிலை அம்மக்கள் வரலாற்றுத் தொடக்ககாலம் முதற்கொண்டே மிளகு, ஏலக்காய் முதலியவற்றைப் பயிரிடவும் அவற்றை மேற்கத்திய நாடுகளுக்குக் குறிப்பாக ரோம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யவும் ஏதுவாக இருந்துள்ளது. இப்பகுதியின் தொல்லியல் முக்கியத்துவத்தை மேலும் உணர இவ்வகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.



தாண்டிக்குடிக்கும் பொம்மகாட்டுக்கும் இடையே மருதநதியின் வலக்கரையில் 1000க்கும் மேற்பட்ட பெருங்கற்படைப் புதைகுழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சுதந்தரத்திற்கு முன்பு இப்பகுதியில் ஆய்வுசெய்த ஆங்லெட் மற்றும் நியூடன் போன்ற ஆய்வாளர்கள் நிலத்திற்கு மேற்புறத்தில் காணப்பட்ட கற்பதுக்கைகளை ஆய்வதில் மட்டுமே கவனம் செலுத்தியுள்ளனர். இதனால் தாழி, பரல்உயர் பதுக்கை முறைகளைக் கவனத்தில் கொள்ளவில்லை. கல்லறைகளின் அமைப்பு, முக்கியத்துவம், காலம் இவற்றை அறிய நான்கு புதைகுழிகள் தெரிவுசெய்யப்பட்டு அகழப்பட்டன.

முதலாவது பரல்உயர் பதுக்கை, காப்பி வாரிய வளாகத்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. வழிநடையுடன் கூடிய (Passage) இப்பதுக்கையின் கிழக்குப் பகுதியில் இடுதுளை காணப்படுகிறது. இக்கல்லறை 3 டன் எடையுடன் கூடிய மூடுகல்லால் (Capstone) மூடப்பட்டிருந்தது. நீத்தோர் நினைவாக மேற்கொள்ளப்பட்ட சடங்குகள் பதுக்கையின்கீழ் வைக்கப்பட்ட கற்பலகையின் மேல் செய்யப்பட்டுள்ளது. 50க்கும் மேற்பட்ட வட்ட வடிவத் தாங்கிகள், தட்டுகள், கிண்ணங்கள், நான்கு கால்களையுடைய சாடிகள் கிடைத்துள்ளன. இக்கல்லறையின் நான்கு மூலைகளிலும் நான்கு தாழிகள் புதைக்கப்பட்டிருந்தன. இத்தாழிகள் ஒன்றை ஒன்று நோக்குமாறு அமைக்கப்பட்டிருந்தன. மேற்குறிப்பிடப்பட்ட பொருட்கள் இத்தாழிகளுக்குக் கீழ்ப்பகுதியிலோ அல்லது பக்கங்களிலோ வைக்கப்பட்டுள்ளன. இம்முறையிலான கல்லறைக்குள் நான்கு தாழிகள் வைத்துச் சடங்குகள் செய்யும் முறை தமிழகத்திலேயே முதன்முறையாக இங்குதான் கண்டறியப்பட்டுள்ளது. வழக்கமாக வைக்கப்படும் ஈமப்பொருட்களுடன் இரும்பினாலான வாள்கள், கத்திகள் வைக்கப்பட்டிருந்தன. இவற்றுள் ஒரு வாள் இரண்டு வட்ட வடிவத்தாங்கி, ஒரு கிண்ணம் ஆகியவற்றின் மேல் வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இது ஏதோ ஒரு வகையில் இவ்வாளிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதைத் தெளிவுறுத்துகிறது.



இக்கற்பதுக்கையில் அரிய மணிக்கற்கள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. ஆயினும் பொம்மகாட்டுப் பகுதியில் அகழப்பட்ட மற்றொரு பதுக்கையில் 350க்கும் மேற்பட்ட சூதுபவள மணிகளும், சில பளிங்கு மணிகளும் கிடைத்துள்ளன. இதுவரை தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளிலே மிகவும் வனப்பான கட்டிடக்கலை அம்சத்தை இக்கல்லறை பெற்றுத் திகழ்வது சிறப்பானதாகும். இது பல அறைகளாகப் பிரிக்கப்பட்ட பரல்உயர் பதுக்கை ஆகும். அவ்வறைகள் அனைத்தும் வட்ட வடிவ இடுதுளைகள் மூலம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருந்தன. தாண்டிக்குடிக்கு அருகே வெங்கக்கல்சரளை என்ற இடத்தில் பளிங்குக்கற்கள் கிடைக்கப்பெறினும் அவை இங்கேயே தயாரிக்கப்பட்டதற்கான ஆதாரம் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. அரியகல்மணிகளான சூதுபவள மணிகள் இந்தியாவில் குஜராத் மாநிலத்தின் கேம்பே பகுதிகளிலும், மஹாராஷ்டிராவின் மேற்குப் பகுதிகளிலும் மட்டுமே கிடைக்கின்றன. எனவே இக்கற்கள் வணிகம் மூலமாகவே இப்பகுதிகளுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. இங்கு விளைந்த மிளகையும், ஏலக்காயையும் மாற்று வணிகப்பொருட்களாகக் கொண்டு இரும்பும் அரிய மணிக்கற்களும் இங்குத் தருவிக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதை ஊகித்து அறியலாம். இதற்கு முன்பாக மேற்கொள்ளப்பட்ட களப்பணி மற்றும் அகழாய்வுகள் மூலம் பழநி மலைப்பகுதியில் கி.மு. 5ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் புதைந்துள்ள பண்பாட்டுச் செல்வத்தை வெளிக்கொணர இதுபோன்ற அகழாய்வு மற்றும் பயிற்சித் திட்டங்களை எதிர்காலத்திலும் செயல்படுத்தத் தமிழ்ப் பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது. இவ்வகழ்வாய்வானது மாணவர்கள் அகழாய்வு நெறிமுறைகளையும் பாரம்பரியத்தின் மதிப்பையும் புரிந்துகொள்ள வாய்ப்பாக அமைகிறது. இவ்வகழாய்வின் வெற்றிக்கு மாணவர்களின் பங்கேற்பு மற்றும் அர்ப்பணிப்பும் காரணமாகும். இவ்வகழாய்வில் நீரகழாய்வு மைய இயக்குநர், திரு ந. அதியமான், தொல்லியல் துறை ஆய்வு மாணவர்கள் திரு மு. ராஜேஷ், திரு ஆ. துளசேந்திரன், முனைவர் மா.பவானி, செல்வி மோ. சரண்யா, திரு மு. தாவுத் அலி, திரு இரா.அன்பரசன் இத்துறையின் முதுகலைப்பட்ட மாணவர்கள் திரு யதீஷ்குமார், திரு முத்துகுமார், திரு வெங்கடாசலம், திரு விக்டர் பாபு மற்றும் இத்துறையின் மைப்படி உதவியாளர் திரு எம். செல்வராஜ் ஆகியோர் ஆர்வத்துடன் பல்கலைக்கழகத்தின் சார்பாகக் கலந்துகொண்டனர். தாண்டிக்குடியில் அமைந்துள்ள காப்பிவாரியத்தின் இணை இயக்குநர் முனைவர் ஸ்டீபன் சாமுவேல்சன், திரு மோகனசுந்தரம் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இவ்வகழாய்விற்குப் பெரிதும் ஒத்துழைத்தனர். இவ்வொத்துழைப்பு தமிழர் பண்பாட்டின்பால் அவர்கள் கொண்ட பற்றினை உணர்த்துகின்றது. அவர்களுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் நன்றி பாராட்டுகிறது.

- முனைவர் **கா. ராஜன்,**
கல்வெட்டியல்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

இ.அ.ப. மட்டும்

நூலஞ்சல்

நாடகத்துறையில் திரு மா. அருணாசலம் பழனியாயி அறக்கட்டளைச் சொற்பொழிவு

தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத்துறையில் அமையப் பெற்றுள்ள பெருமள்ளர் திரு மா. அருணாசலம் பழனியாயி அறக்கட்டளைச் சொற்பொழிவு 29-04-2004 அன்று புலவிருந்தகக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் அவர்கள் தலைமையேற்றார். பாண்டிச்சேரி பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் அ.அறிவுநம்பி அவர்கள் "சங்கரதாச சுவாமிகள் - ஒரு நாடகத் திருப்புமுனை" என்னும் பொருண்மையில் அறக்கட்டளைச் சொற்பொழிவாற்றினார். நாடகத்துறைத்தலைவர் முனைவர் க. இரவீந்திரன் வரவேற்புரையாற்றினார். ஆய்வாளர் செல்வி இரா. திராவிடராணி நன்றி கூறினார்.

- முனைவர் க. இரவீந்திரன், நாடகத்துறை

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தைப் பார்வையிட்டோர் கருத்து .....

I am happy very much when visited to Tamil University Library, I have a welcome and good facility from the Officers here. Thanks a lot for kindness.

- Dr. Bumroong Khom-Ek
Department of Oriental Languages, Faculty of Archaeology,
Silpakom University, BankKok, Thailand, May 07-2004

We are very happy to see an ocean of knowledge preserved in form of books so systematically and nicely. Even the latest books are available to a student who wishes to update his knowledge. It was a wonderful experience to be here.

- V.S. Naik, Director, Maratta Language,
Govt. of Maharastra, 16.06.2004

நடைபெற்ற நிகழ்வுகள்

சூன் '04 இல் .....

16.06.2004	- மகாராட்டிர மாநில அரசின் மராத்திவிகாஸ் சமிதிகுழு பல்கலைக்கழகத்தைப் பார்வையிடல்
17.06.2004	- வளாக மேம்பாடுகள் - பார்வையிடல்
18.06.2004	- கட்டடக்குழுக்கூட்டம் - வளாகமேம்பாட்டுத்திட்டப் பணி ஆய்வு
23.06.2004	- பேருந்துப் பயனீட்டாளர் கூட்டம்
24.06.2004	- செய்தியாளர் கூட்டம்

முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு

சூன் '04 இல் .....

ஆய்வாளர் பெயர் / துறை	தலைப்பு	வாய்மொழித் தேர்வு நடைபெற்ற நாள்
1. பூ. முனியம்மாள், சிற்பத்துறை	திருக்குறுங்குடி - அழகிய நம்பிராயர் கோவில் படிமக்கலை - ஓர் ஆய்வு	07-06-2004
2. பா. தனபாக்கியம், இலக்கியத்துறை	தமிழ் நாவல்களில் கிராம வாழ்க்கை	08-06-2004
3. ப. மகாலட்சுமி, நாட்டுப்புறவியல்துறை	நாகூர்வாழ் மீனவர்களின் மரபுவழி மருத்துவம்	28-06-2004

- தமிழ்ப் பல்கலைக்கழகத் தேர்வுப்பிரிவு